தரம் 11

# தமிழ் மொழியும் இலக்கியமும்

அலகு 03

வாக்கியங்கள்

(இலக்கணம்)

MR.R.F.ROSHAN
NP/MN/MURUNKAN MAHA VIDYALAYAM

# வாக்கியங்கள்

❖ பொருள் தரத்தக்க வகையில் சொற்கள் குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து முற்றுப்பொருளைத் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

பின்வரும் வாக்கியங்களை நோக்குவோம்:

➢ தசரதன் அயோத்தியை ஆண்டான்.

➢ உமறுப்புலவர் சொற்சுவை மிகுந்த முதுமொழிமாலையை இயற்றினார்.

➢ சங்க காலத்திலே ஈழநாட்டுப் புலவர்கள் தென்னிந்தியாவுக்குச் சென்று அங்கு நிறுவப்பட்ட சங்கங்களில் பாக்களை அரங்கேற்றினரெனச் சங்க நூல்கள் வாயிலாக அறிகின்றோம்.

❖ ஒரு வாக்கியத்தின் முழுமைக்கு சொற்றொடர்களின் அமைப்பு முக்கியமானது.

# சொற்றொடர் வகைகள்

ஒரு வாக்கியத்தில் பல வகையான சொற்றொடர்கள் அமைந்திருக்கும்.

பெயர்த்தொடர்

வினைத்தொடர்

பெயரடைத் தொடர்

வினையடைத்தொடர்

## பெயர்த்தொடர்

ஒரு பெயர்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயர்த்தொடர் ஆகும்.

உ-ம்:

பறவை

அழகான பறவை

மிக அழகான பறவை

இங்கு “பறவை” என்ற பெயர்ச்சொல் தலைமை உறுப்பு. ஏனையவை அதற்கு அடையாக வந்துள்ளன.

# வினைத்தொடர்

ஒரு வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினைத்தொடர் ஆகும்.

உ-ம்:

சென்றது

பறந்து சென்றது

மெதுவாகப் பறந்து சென்றது

இங்கு ''சென்றது'' என்பது தலைமை உறுப்பாகும். ஏனையவை அதற்கு அடையாக வந்துள்ளன.

## பெயரடைத்தொடர்

ஒரு பெயரடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயரடைத்தொடர் ஆகும்.

உ-ம்:

அழகான

மிக அழகான

அனைத்திலும் மிக அழகான

இங்கு "அழகான" என்ற பெயரடை தலைமை உறுப்பு. ஏனையவை அதற்கு அடையாக வந்துள்ளன.

## வினையடைத்தொடர்

ஒரு வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினையடைத்தொடர் ஆகும்.

உ-ம்:

பறந்து

அருகாகப் பறந்து

மிக மெதுவாகப் பறந்து

இங்கு "பறந்து" என்பது தலைமை உறுப்பாகும். ஏனையவை அதற்கு அடையாக வந்துள்ளன.

# வாக்கியங்களின் அமைப்பு

வாக்கியங்களை அமைப்பின் அடிப்படையில்

- தனிவாக்கியம்
- கூட்டு வாக்கியம்
- கலப்பு வாக்கியம்

என வகைப்படுத்தலாம்.

## தனிவாக்கியத்தின் அமைப்பு

1. பெயர்த்தொடர் + பெயர்தொடர் அமைப்பு – பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம்

பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியங்களில் எழுவாயும் பயனிலையும் பெயர்த் தொடர்களாகவே அமைந்திருக்கும்.

உ-ம்:

பிரமிள் சிறந்த கவிஞன்.

எஸ்.பொ. சிறந்த கதைசொல்லி.

2.பெயர்த்தொடர் + வினைத்தொடர் அமைப்பு – வினைப்பயனிலை கொண்ட வாக்கியம்

வினைப்பயனிலை கொண்ட வாக்கியங்களில் பெயர்ச்சொல் எழுவாயாகவும் வினைச்சொல் பயனிலையாகவும் இருக்கும்.

பயனிலை தனிவினையாக அல்லது கூட்டுவினையாகவும் இருக்கலாம்.

உ-ம்:

சாளினி நடனம் ஆடினாள்.

சுரேகா பாடிக்கொண்டிருந்தாள்.

# கூட்டுவாக்கியத்தின் அமைப்பு

இரண்டு வாக்கியத் தொடர்கள் சமநிலையில் இணைக்கப்படும் போது கூட்டு வாக்கியங்கள் உருவாகின்றன.

உ-ம்:

நான் கவிதை எழுதினேன்.

நண்பன் கவிதை எழுதினான்.

நானும் நண்பனும் கவிதை எழுதினோம்.

இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இரண்டு தனித்தனியான சமநிலை நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு சமநிலையான வாக்கியத் தொடர்களை இணைப்பதற்கு இணைப்பிடைச் சொற்களும் வினை எச்சங்களும் பயன்படுகின்றன. கூட்டு வாக்கியங்களில் பின்வரும் இடைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. உம்
2. அல்லது, இல்லையென்றால், ஓ, ஆவது, ஆ
3. ஆனால், ஆகவே

இராமன் பர்ணசாலைக்குச் சென்றான்.
இலக்குமணன் ஆற்றுக்குச் சென்றான்.

இராமன் பர்ணசாலைக்கும் இலக்குமணன் ஆற்றுக்கும் சென்றனர்.

நான் மிகிந்தலை செல்வேன்.
நான் கதிர்காமம் செல்வேன்.

நான் மிகிந்தலை அல்லது கதிர்காமம் செல்வேன்.

நீ என்னுடன் தேவாலயத்திற்கு வருகிறாயா?
நீ என்னுடன் தேவாலயத்திற்கு வரவில்லையா?

நீ என்னுடன் தேவாலயத்திற்கு வருகிறாயா? இல்லையா?

நளன் தன் பிள்ளைகளை அறிந்திருந்தான்.
நளன் தன்னை வெளிப்படுத்தவில்லை.

நளன் தன் பிள்ளைகளை அறிந்திருந்தான் ஆனால் தன்னை வெளிப்படுத்தவில்லை.

# கலப்பு வாக்கியம்

ஒரு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்புநிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம் கலப்பு வாக்கியம் ஆகும்.

நாளை வருவான் ஒரு மனிதன் என்று நீலாவணன் பாடினார்.

அம்மா காய்கறி வாங்கச் சந்தைக்குச் சென்றார்.

சீதை இராமன் வந்ததைக் கண்டாள்.

| **தலைமை வாக்கியம்** | **சார்பு நிலைத் தொடர்** | **நிரப்பி** |
|---|---|---|
| நீலாவணன் பாடினார் | நாளை வருவான் ஒரு மனிதன் | என்று |
| அம்மா சந்தைக்குச் சென்றார் | காய்கறி வாங்க | |
| சீதை கண்டாள் | இராமன் வந்ததை | |

## சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. பொருள் தரத்தக்க வகையில் சொற்கள் குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து முற்றுப்பொருளைத் தருமாயின் அது

1 பத்தி
2. வாக்கியம்
3. கட்டுரை
4. உரையாடல்

2. ஒரு வாக்கியத்தின் முழுமைக்கு முக்கியமானது.

1. அடைமொழிகள்
2. அடுக்குத் தொடர்கள்
3. சொற்றொடர்களின் அமைப்பு
4. அடுக்கிடுக்குத் தொடர்கள்

3. பின்வருவனவற்றுள் சொற்றொடர் வகைக்குள் அடங்காதது.

1. பெயர்த்தொடர்
2. பெயரடைத்தொடர்
3. வினைத்தொடர்
4. அணித்தொடர்

4. அனைத்திலும் சிறந்த காய்கனிகளைத் தெரிந்தெடுத்தாள். இங்கே "அனைத்திலும் சிறந்த" என்பது

1. பெயர்த்தொடர்
2. பெயரடைத்தொடர்
3. வினைத்தொடர்
4. வினையடைத்தொடர்

5. மலர்கள் மிக அழகாக மலர்ந்தன. இங்கு பயன்பட்டுள்ள வினையடைத் தொடர்

1. கழுகு
2. மிக
3. அழகாக
4. மிக அழகாக

6. சுவையான மாம்பழங்கள். இது எவ்வகைத் தொடர்

1. பெயர்த்தொடர்
2. பெயரடைத்தொடர்
3. வினைத்தொடர்
4. வினையடைத்தொடர்

7. பின்வருவனவற்றுள் பெயர்ப் பயனிலை கொண்ட வாக்கியம்.

1. கம்பன் காவியம் பாடினான்.
2. கமலன் சிறந்த வீரன்.
3. அவன் வேகமாக எழுதினான்.
4. விமலா அழகாக ஆடினாள்.

**8. நான் கோவிலுக்குச் சென்றேன்.**
**அவன் கோவிலுக்குச் சென்றான்.**

இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பயன்படும் இணைப்பிடைச்சொல்

1. ஆகவே
2. ஆனால்
3. உம்
4. எனினும்

9. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என கணியன் பூங்குன்றனார் பாடினார். இது

1. தனிவாக்கியம்
2. கூட்டு வாக்கியம்
3. எச்சத்தெடர் வாக்கியம்
4. கலப்பு வாக்கியம்

10. நாளை பாடசாலை நடைபெறும் என அதிபர் கூறினார். இவ்வாக்கியத்தின் தலைமைத்தொடர்

1. நாளை பாடசாலை நடைபெறும்
2. அதிபர் கூறினார்
3. நடைபெறும்
4. என

**சரியாயின் சரி (√) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் அடையாளமிடுக.**

01. வேகமாக ஓடினான் என்பது வினைத்தொடர் ஆகும்.

(√)

02. ஒரு வாக்கியத்தின் முழுமைக்கு சொற்றொடர்களின் அமைப்பு முக்கியமில்லை.

(X)

03. கலப்பு வாக்கியத்துள் அமையும் சார்புநிலைத் தொடர்கள் மூன்று வகையாகும்.

(√)

04. பறந்து சென்றது என்பதில் தலைமை உறுப்பு பறந்து ஆகும்.

(X)

05. இரண்டு வாக்கியத்தொடர்களின் சமநிலை இணைப்பே கூட்டு வாக்கியம்.

(√)

06. சீதை இராமன் வந்ததைக் கண்டாள். இது ஒரு தனிவாக்கியம் ஆகும்.

(X)

07. நீ புத்தகத்தைத் தருவாயா? இல்லையா? என்பது கலப்பு வாக்கியமாகும்.

(X)

08. அவன் சிறந்த நடிகன். இது பெயர்ப்பயனிலை பெற்ற வாக்கியமாகும்.

(√)

09. முகக்கவசம் அணியவேண்டும் என வைத்தியர் வலியுறுத்தினார். இது தனிவாக்கியமாகும்.

(X)

10. அம்மா சோறும் கறியும் சமைத்தாள். இதுவொரு தனிவாக்கியமாகும்.

(X)

# தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| அழகான பறவை | இணைப்பிடைச்சொல் |
| வேகமாக ஓடினான் | பெயர்ப்பயனிலை |
| ஆகவே | பெயரடைத்தொடர் |
| கடவுள் நல்லவர் | பெயரடை |
| அழகான | வினையடைத்தொடர் |

## பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. வாக்கியம் என்றால் என்ன?

பொருள் தரத்தக்க வகையில் சொற்கள் குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து முற்றுப்பொருளைத் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

02. சொற்றொடர் எத்தனை வகைப்படும்? அவை எவை?

04 வகைப்படும்

பெயர்த்தொடர்

பெயரடைத்தொடர்

வினைத்தொடர்

வினையடைத்தொடர்

03. சொற்றொடர் வகைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

பெயர்தொடர் - பறவை
பெயரடைத்தொடர் - மிக அழகான
வினைத்தொடர் - ஓடினான்
வினையடைத்தொடர் - வேகமாக

04. தனிவாக்கியத்தின் அமைப்பு யாது? உதாரணம் தருக.

பெயர்த்தொடர் + பெயர்தொடர் அமைப்பு – பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம்
உ-ம்: கடவுள் மிகவும் நல்லவர்.

பெயர்த்தொடர் + வினைத்தொடர் அமைப்பு – வினைப்பயனிலை கொண்ட வாக்கியம்

உ-ம்: கமலா நடனம் ஆடினாள்.

05. கலப்பு வாக்கியம் என்றால் என்ன? உதாரணம் தருக.

ஒரு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்புநிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம் கலப்பு வாக்கியம் ஆகும்.

உ-ம் : ‘சுதந்நிர இந்நதியாவே எனது நோக்கம்’ என காந்தி கூறினார்

தலைமைத்தொடர் - காந்தி கூறினார்.

சார்புத்தொடர் - ‘சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்’

நிரப்பித்தொடர் - என

# நன்றி